# செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம்

(தன்னாட்சி நிறுவனம், கல்வி அமைச்சகம், இந்திய அரசு)

40, சாலைப் போக்குவரத்து நிறுவன வளாகம், நூறடிச் சாலை, தரமணி, சென்னை – 600113

CENTRAL INSTITUTE OF CLASSICAL TAMIL

(An Autonomous Insitution under Ministry of Education, Government of India, New Delhi)

40, IRT Campus, 100 Feet Road, Taramani, Chennai - 600113

सत्यमेव जयते


*பயிலரங்கம் -18* **நாள்: 24.11.2021**

## மொழியியல் புலம்

### திராவிட மொழிகளும் தமிழ் மொழியின் அமைப்பும் - ஒப்பாய்வு

### (22.12.2021-29.12.2021)

### அறிவிப்பும் அழைப்பும்

செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம், மொழியியல் புலத்தின் சார்பாகத் **திராவிட மொழிகளும் தமிழ் மொழியின் அமைப்பும்-ஓர் ஒப்பாய்வு'** என்னும் தலைப்பில் பயிலரங்கு ஒன்றினை நடத்துவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது. பேச்சுவழக்கில் இருக்கும் மொழிகளின் அடிப்படையில் அம்மொழிகளின் வகைப்பாடு (Classification), மொழி வகைகள் (Type of Language), மொழி அமைப்பு (Language System), தாய்மொழி (Mother Tongue), அயல்மொழி (Foreign Language) எனவும் பகுப்பாய்வு செய்துள்ளார்கள். அப்பகுபாய்வுகளின் வழிக்கொண்டு இந்திய துணைக்கண்டத்தில் பேசும் மொழிக் குடும்பத்தை 1. *இந்தோ-ஐரோப்பிய மொழிகள்* 2. *திராவிட மொழிகள்* 3. *ஆஸ்ரோ- ஆசியாடிக் மொழிகள்* 4. *திபேத்திய-பர்மிய மொழிகள்* என்ன்னும் நான்கு பெரும் பிரிவுகளில் அடங்கும் எனக் கருதுவர்.

அம்மொழிக் குடும்பத்தில் திராவிட மொழிகளை மேலும் மூன்று பிரிவுகளாகப் பகுத்துள்ளார்கள். *தென்திராவிட மொழிகள்* (22) *நடுத்திராவிட மொழிகள்* (06) *வடதிராவிட மொழிகள்* (03) இம்மொழிக் குடும்பங்களைச் சார்ந்து *தமிழ், மலையாளம், கன்னடம், இருளா, கொடகு, குறும்பா, தோடா, கோத்தா, படகா, கொராகா, துளு, தெலுங்கு, கோண்டி, குருக், துளு, கூயி, பிராகூய், கூவி, கோயா, மால்தோ, குடகு, கோலமி, பர்ஜி, கொண்டா, கதபா, நாயக்கி, பெங்கோ, மண்டா, இந்த்(ஆவே)* ஆகிய திராவிட மொழிகள் (31) உள்ளன. (***திராவிட மொழிகள்*** - பத்ரி.கிருட்டிணமூர்த்தி 2003.)

அம்மொழிகளில் ஏற்பட்டுள்ள சொற்கள் மாற்றம் (Lexical change), ஒலி மாற்றம் (Sound change), ஒலிப்புமுறை மாற்றம் (Phonetic change), ஒலியன் மாற்றம் (Phonological change), இலக்கண மாற்றம் (Grammatical change), உருபு மாற்றம் (Morphological change), தொடரியல் மாற்றம் (Syntactic change), சொற்பொருள் மாற்றம் (Semantic change), அமைப்பியல் மாற்றம் (Structural change), எழுத்து மாற்றம் (Writing change), சமூகப் பண்பாட்டு மாற்றம் (Socio Cultural

change), கடன் சொற்கள் (Borrowed Words), கூட்டுச் சொற்கள் (Compound Words), கிளைமொழிச் சொற்கள் (Dialect Words), கல்வெட்டுகள் (Inscriptions), இலக்கியம் (Literature), அயல்நாட்டவர் குறிப்புகள் (Foreigners), ஆகிய பொருண்மைகளைத் தொடக்க காலம் முதல் இக்காலம்வரை தமிழ் மொழியின் அமைப்பைக் கொண்டு *மலையாளம், கன்னடம், தெலுங்கு, கொராகா, துளு,* இன்னும் பிற மொழிகளில் நடைபெற்ற மாற்றங்கள் குறித்து இப்பயிலரங்கில் ஆய்வுரைகளும் பயிற்சியும் வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

இன்றைய திராவிட மொழிகளில் ஏற்பட்டுள்ள மொழியின் மாற்றங்கள் வளர்ச்சிகள் குறித்த விரிவான கருத்துரைமிக்க இப்பயிலரங்கில் முனைவர்பட்ட ஆய்வு மேற்கொள்ளும் மாணவ/மாணவியர் கலந்துகொண்டு பயன்பெற வேண்டும் என்னும் நோக்கத்திற்காக இப்பயிலரங்கம் நடத்தப்படுகிறது. மொழியியல் அறிஞர்கள், பன்மொழி அறிவுப்புலமைப் பெற்றுள்ள அறிஞர்கள் ஆகியோர் இப்பயிலரங்கில் பயிற்றுவிக்க உள்ளார்கள்.

**பயிலரங்கின் விதிமுறைகளும், விவரங்களும் பின்வருமாறு:**

1. பயிலரங்கில் கலந்து கொள்ள அனுமதிக்கப்படுபவர்களின் எண்ணிக்கை 2**0.**
2. பயிலரங்கு நடைபெறும் நாட்கள்: **22.12.2021** முதல் **29.12.2021** முடிய ஏழு நாட்கள்
3. பயிலரங்கு நேரம்: காலை **10.00 – 01.00** & மாலை **02.00 – 05.00**.
4. பங்கேற்பாளர்கள் தங்குமிடத்தைத் தாங்களே ஏற்பாடு செய்துகொள்ள வேண்டும்.
5. பங்கேற்பாளர்களுக்குப் பயணப்படியும் நாட்படியும் மத்திய அரசு விதிமுறைகளின்படி வழங்கப்படும்.
6. பங்கேற்பாளர்களுக்கு மதிய உணவும், தேநீரும் நிறுவனத்தின் சார்பில் வழங்கப்படும்.
7. பயிலரங்கில் கலந்து கொள்ள விரும்புவோர் இதன் கீழுள்ள விண்ணப்பத்தை நிறைவுசெய்து **workshopl@cict.in** என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்புதல் வேண்டும். இப்பயிலரங்கைப் பற்றிய கூடுதல் தகவல்களைத் தெரிந்துகொள்ள மேற்கண்ட மின்னஞ்சல் மூலமாகவே தொடர்புகொள்ள வேண்டும். எக்காரணத்தைக் கொண்டும் தொலைபேசி/ அலைப்பேசி வழியாகத் தொடர்புகொள்ளக் கூடாது.
8. பயிலரங்கக் கட்டணம் ஏதும் இல்லை.
9. செம்மொழி நிறுவன விதிமுறைகளின்படி தேர்ந்தெடுக்கப்பட்டவர்களுக்கு மின்னஞ்சல்/ புலனம் வழியாக மட்டும் அழைப்பாணை அனுப்பி வைக்கப்படும்.
10. பங்கேற்பாளர்கள் செம்மொழி நிறுவன விதிமுறைகளைப் பின்பற்றிட வேண்டும்.
11. நிறைவு செய்யப்பெற்ற விண்ணப்பங்கள் வந்துசேர வேண்டிய இறுதுநாள் **14.12.2021**. காலதாமதமாக வரும் விண்ணப்பங்கள் எக்காரணத்தைக் கொண்டும் ஏற்கப்படமாட்டா.
12. இப்பயிலரங்கில் பங்கேற்கத் தேர்ந்தெடுக்கபட்டவர்களுக்கு **15.12.2021** அன்று மின்னஞ்சல் / புலனம் மூலமாகத் தகவல் தெரிவிக்கப்படும்

# செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம், சென்னை

## திராவிட மொழிகளும் தமிழ் மொழியின் அமைப்பும் -ஒப்பாய்வு

**(22.12.2021– 29.12.2021)**

### விண்ணப்பப் படிவம்

நிழற்படம்

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1. | பெயர் | தமிழ் | | | | | | |
| | | ஆங்கிலம் | | | | | | |
| 2. | பிறந்த நாள் / வயது | | | | | | | |
| 3. | பாலினம் | | | | | | | |
| 4. | வகுப்பு(√செய்க) | | பொது | | இ.பி.வ. | | பட்டியல் இனத்தவர் | |
| 5. | கல்வித் தகுதி | | | | | | | |
| 6. | ஆய்வியல் நிறைஞர்/ முனைவர் பட்டப் படிப்பில் சேர்ந்த நாள்/ ஆண்டு | | | | | | | |
| 7. | ஆய்வியல் நிறைஞர்/ முனைவர் பட்டப் ஆய்வுத் தலைப்பு | | | | | | | |
| 8. | பல்கலைக்கழகம் / கல்லூரி/ நிறுவன முகவரி (தொலைப்பேசி/மின்னஞ்சல் | | | | | | | |
| 9. | இல்ல முகவரி (தொலைபேசி) மின்னஞ்சல் | | | | | | | |
| 10. | புலன எண் | | | | | | | |
| 11. | செம்மொழி நிறுவனம் இக்கல்வியாண்டில் நடத்திய பயிலரங்கில் கலந்துகொண்டீர்களா? ஆம் எனில் விவரம் தருக | | ஆம் | | இல்லை | | | |

நாள்: **(கையொப்பம்)**

இடம்:

**நெறியாளர் /துறைத் தலைவர்/ முதல்வர்/ பதிவாளர்**

**உரிய முத்திரையுடன் கையொப்பம்**